# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 32 December - 2019 Issue -12


ஆசிரியர் உரை

## தீர்மானங்கள்

தீர்மானம் என்னும் இவ்வார்த்தை தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட நமக்கு அந்நியமான ஒன்றல்ல என்று தீர்மானமாகச் சொல்லி விட முடியும். ஏனெனில், இவ்வார்த்தை நம் தனிப்பட்ட வாழ்வோடும், நமது சமுதாய வாழ்வோடும் பின்னிப் பிணைந்த ஒன்றாகப் பன்னெடுங் காலமாகத் திகழ்ந்து வருகிறது. **தீர்மானம்** என்னும் வார்த்தைகளுக்கான பொருள், **ஒன்றைச் செய்வேன் என்றோ அல்லது செய்யமாட்டேன் என்றோ எடுக்கப்படும் உறுதியான நிலைப்பாடு** ஆகும். ஒரு வேளை, இதன் நேரடிப் பொருள் இப்படியாக இருந்தாலும், மிகப் பெரும்பாலும் தீர்மானங்கள் அற்ப ஆயுளைக் கொண்டதாகவே காணப்படுகிறது. தனி மனிதனாக இருந்தாலும், சமுதாயமாக இருந்தாலும், ஏன் ஒரு தேசமாக இருந்தாலும் இது தான் யதார்த்தம்.

இப்பஜ எல்லோரையும் ஏகமாய்ப் பதம் பார்த்து வரும் இந்தத் தீர்மானம் கிறிஸ்தவத்தையும் விட்டு வைக்கவில்லை. சொல்லப் போனால், ஆரம்ப காலந்தொட்டே கிறிஸ்தவத்தை இது தன் ஆதிக்கத்தின் கீழ் அதிக சிரமமில்லாமல் கொண்டு வந்துவிட்டது. ஆம், வருடக் கடைசி என்று வரும் போது, வயது, இனம், மொழி தேசம் என்று எந்தப் பாகுபாடும் இல்லாமல், கிறிஸ்தவம் இவ்வார்த்தையைத் தேடிக் கண்டுபிடித்து இவ்வார்த்தையோடு தங்களை சம்பந்தப்படுத்த பிரயானச எடுக்கிறது. அதுவும் இறுதி நாட்கள் நெருங்கும் போது இவ்வார்த்தையின் பாதிப்பு உச்சத்திற்குச் சென்றுவிடும். ஏனெனில், அந்த நாட்கள் தான் வரப்போகும் புதிய ஆண்டைக் குறித்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் நாட்கள்.

அந்த நாட்கள் தான் அடுத்த ஆண்டைக் குறித்த அச்சத்தை ஏற்படுத்தும் நாட்கள். அந்த நாட்கள் புத்தாண்டாகிலும் நன்றாக இருக்காதா என்ற ஏக்கத்தை ஏற்படுத்தும் நாட்கள்.

அந்த நாட்களில் தான், கடந்து போகும் ஆண்டைக் குறித்தான கணக்கெடுப்பும் அவசரகதியில் நடக்கும். இவ்வாண்டில் சந்தித்த அப்பிரச்சனைக்கு இப்படிச் செய்தது தான் காரணமாக இருந்திருக்குமோ? நாம் கடந்து வந்த அந்த எக்கச்சக்க சூழ்நிலைக்கு அப்படிச் செய்யாமல் போனது தான் காரணமாக இருந்திருக்குமோ? அதை நடத்தியிருக்கலாமோ, இதைத் தவிர்த்திருக்கலாமோ என்றெல்லாம் ஏடாகூடமாக எண்ணத் தோன்றும். இப்படிப்பட்ட ஒரு குழப்பமான மனநிலையில், இறை உணர்வு கொண்ட கிறிஸ்தவ சமுதாயம், போனது போகட்டும், வரும் ஆண்டாகிலும் நன்மையின் ஆண்டாக, ஆசீர்வாதத்தின் வருடமாக, சமாதானத்தின் ஆண்டாக அமையட்டும் என்று எண்ணி சில முடிவுகளை எடுக்க முனைப்பு காட்டும். இப்படிப் பய உணர்வும், பக்தி உணர்வும் கலந்து வெளிப்படுவது தான் பெரும்பாலான புத்தாண்டுத் தீர்மானங்கள். அப்படித்தானே!

ஒரு வேளை, திருமறை ஆசான் வாசகர்களாகிய நீங்களும் புத்தாண்டு தீர்மானம் சம்பந்தமாக எண்ணிக் கொண்டிருக்கக்கூடும். அதற்கு உதவும்படியாக சில வேதாகம மனிதர்கள் எடுத்த தீர்மானங்களை உங்களுக்கு முன்பாகக் கொண்டு வருகிறேன். ஆனால், அவைகள் ஓராண்டுக்கான தீர்மானங்களல்ல. மாறாக, வாழ்நாள் முழுமைக்குமான தீர்மானங்கள். அவைகளில் நம் சிந்தையைச் செலுத்தி புதிய ஆண்டை ஆசீர்வாதமும், சமாதானமும் நிறைந்த ஒன்றாக மாற்றிக் கொள்ள முயற்சிப்போம்.

**1 தானியேலின் தீர்மானம்.**

எதிர்வரும் புதிய ஆண்டுக்கான தீர்மானம் சம்பந்தமாக நாம் முதலில் பார்க்க இருப்பது தானியேல் தன்னைத் தீட்டுப்படுத்தாமலிருக்க எடுத்த தீர்மானம் பற்றியது.

ஒட்டு மொத்த வேதாகமத்தில் தானியேல் ஓர் அலாதியான தேவ மனிதன். எதிர்மறையாக எதுவும் சொல்லப்படாத ஒரு சில தேவ மனிதர்களில் இவனும் ஒருவன். இவனைப் பிறரோடு ஒப்பிட்டுப் பேச பரிசுத்த ஆவியானவர் விரும்பிய போது, மோசேயின் காலத்தைச் சார்ந்த யாரும் அதற்குத் தகுதியில்லை என்று கருதி, முற்பிதாக்கள் காலத்தைச் சார்ந்த நோவாவோடும், யோபுவோடும் ஒப்பிட்டிருக்கிறார். (எசே. 14:14,20). இது ஒன்று போதும், இவன் சிறப்புக்கு!

பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றுகையிட்டுச் செய்த முதல் காரியங்களில் ஒன்று, இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத்தார்களிலும், துரைமார்களிலும், யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரைக் கொண்டு வரும் படி செய்தான் [தானி.1:3]. அவர்களுக்குக் கல்தேயர் எழுத்து கற்றுக் கொடுக்கவும், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ராஜபோஜனம் மற்றும் ராஜ பானம் வழங்கவும் பிரதானிகளின் தலைவனுக்கு ராஜா கட்டளை கொடுத்தான் [1:4,5]. கொண்டு வரப்பட்ட நான்கு பேரில் தானியேலும் ஒருவன். இவர்களுக்குச் செய்யப்பட்ட இன்னொரு காரியம் பெயர் மாற்றம் தானியேல் பெல்தெஷாத்சார் என்று மாற்றப்பட்டான். மொழி மாற்றம். பெயர் மாற்றம் இவைகளெல்லாம் அவர்கள் தாங்கள் அடையாளத்தை இழக்கும்படியான யுக்திகள். வேதாகமத் தகவல்களினடிப்படையில் கணக்கிடும் போது, அப்போது தானியேலுக்கு ஒரு 15-16 வயதுக்கு மேல் இருக்க வாய்ப்பில்லை.

சரித்திரத்தின் அக்கால கட்டத்தில் பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எதிர் பேசப்படாத பேரரசன். இப்பேரரசனின் ஆணை தானியேல் உட்பட நால்வருக்கும் ராஜபோஜனமும், ராஜ பானமும் வழங்கப்பட வேண்டுமென்பது. அந்நாட்களில் அரச கட்டளை அலட்சியப்படுத்தப்பட்டால் மரண தண்டனை உறுதி [1:10]. இந்நடைமுறை தானியேல் அறிந்த ஒன்றாகவே இருந்திருக்கும். அப்படியிருந்தும் அப்பதின் பருவத்தில் தானியேல் ராஜபோஜனத்தாலும், ராஜபானத்தாலும் தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாதபடி, **தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டு** பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டுதல் செய்தான்[1:8].

இத்தீர்மானத்திற்குக் காரணம் என்ன? பொதுவாக சாப்பாட்டை நேசிக்கும் அப்பதின் பருவத்தில், ராஜபோஜனத்தின் வகைகளும், ராஜபானத்தின் ருசியும் அவன் மனதிற்கு முன்பாக வந்து நின்று அவனுக்கு ஆசை காட்டிய போது, அவன் அதை மாத்திரம் பார்க்காமல், அதைத்தாண்டி, அதன் அருகில் மோசேயின் பிரமாணக் கேட்பாடுகளைக் கொண்டு வந்து நிறுத்தி ஒப்பிட்டுப் பார்த்துள்ளான். அதன் மூலம் அவன் சிலவற்றைக் கண்டு கொண்டான். 1. ராஜபோஜனம் தீட்டும், அசுத்தமுமானதைக் கொண்டு சமைக்கப்பட்டிருக்கலாம் [உகா.14:3,7; அப்.10:14]. 2. இரத்தம் கலந்த போஜனமாக அது இருக்ககூடும். [லேவி.17:11,12 அப்.15:20] 3. சமைத்த பிறகு அது அவர்கள் தெய்வங்களுக்குப்

படைக்கப்பட்டுப் பிறகு பரிமாறப்படக் கூடும் [I கொரி.8:4]4. ராஜ பானம் போதையைக் கொடுக்கக் கூடியதாக இருக்கலாம். ராஜ போஜனத்தை நினைக்கும் போது நாவில் நீர் ஊறினாலும், அவன் மனத்திரையில் இவைகளெல்லாம் ஓடினபடியால், அவைகள் தன்னைத் தீட்டுப்படுத்தும் என்று எண்ணித் தீர்மானித்தாள்.

அருமையானவர்களே! அந்த இளம் வயதில், தானியேல், மோசேயின் பிரமாணங்களுக்கு கொடுத்த முக்கியத்துவத்தைப் பாருங்கள்! ஆச்சரியமாக இல்லையா? தானியேலின் தீர்மானம் தேவ வார்த்தைகளை ஆதாரமாகக் கொண்டிருந்தது. தேவ வார்த்தைகளுக்கு விரோதமான செயல்பாடு தன்னைத் தீட்டுப்படுத்தும் என்பதில் அவனுக்குத் தெளிவு இருந்தது. ஆண்டு இறுதியில் தீர்மானம் எடுக்க விரும்பும் நாம் ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட சிந்தையோடு தான் தீர்மானங்களுக்குத் தயாராகிறோமா? தானியேலுக்கு இப்படிச் செய்ய வேண்டுமென்று நேரிடையான கட்டளை எதுவுமில்லை. ஆயினும், வேத வசனங்களினடிப்படையில் தீர்மானம் எடுத்தான்.

ஆனால், சிலுவைக்குப் பின்னால் வாழும் நமக்கு நேரிடையான கட்டளை கொரிந்து சபைக்கு எழுதின நிருபத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் [II கொரி.6:17]. இங்கே எழும் கேள்வி அசுத்தமானது எது? எவை? என்பது. இதற்கு விடை கொடுக்க வேண்டுமனால் ஒரு நீண்ட பட்டியல் போடப்பட வேண்டும். அதற்கு இங்க இடமில்லை. ஆயினும், ஆலயமாகிய சரீரத்தையும் [I கொரி.3:16]. அழிவில்லாத ஆத்துமாவையும் தீட்டுப்படுத்தும் எல்லாமே அசுத்தமானது தான். அசுத்தமானதைத் தொடக்கூடாது என்று இங்கே நாம் எச்சரிக்கப்படுகிறோம். தானியேல் எது தன்னைத் தீட்டுப்படுத்தும் என்பதைத் தெரிந்து கொள்ள மோசேயின் பிரமாணத்தை நாடியது போல், நாம் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டுப் பிரமாணங்களைக் கவனித்து அசுத்தங்களையும், தீட்டானவைகளையும் கிறிஸ்துவின் உபதேசத்தைக் கொண்டு இனங்கண்டு, புதிய ஆண்டில் அவைகளைத் தொடமாட்டோம் என்று தீர்மானிப்போமாக!

**11 யோசுவாவின் தீர்மானம்.**

எதிர்வரும் புதிய ஆண்டுக்கான தீர்மானம் சம்பந்தமாக நாம் இரண்டாவது பார்க்க இருப்பது யோசுவா கர்த்தரைச் சேவிக்க எடுத்த தீர்மானம் பற்றியது.

யோசுவா மோசேயின் கீழ் பணியாற்றிய ஓர் ஊழியக்காரனாக இருந்தாலும் (யாத்.24:13), தலைமைப் பண்பில் மேசேயைக் காட்டிலும் சிறந்தவன். கானானை வேவு பார்க்க அனுப்பப்பட்ட 12 பேரில் ஒருவன் என்பதை தாண்டி, காலேபோடு சேர்ந்து சாதகமான பதிலைக் கொண்டு வந்தவன் (எண் 11:1-3; 14:16-10). மோசேக்குப் பிறகு, முரட்டாட்டமும், முறுமுறுப்பும் கொண்ட இஸ்ரவேலை வழிநடத்தும் பொறுப்பை ஏற்று ஜனங்களைப் பாங்காக வழிநடத்தி எதிரிகளை முறியடித்துக் கானானை வெற்றிகரமாகப் பங்கிட்டுக் கொடுத்தான் (யோசுவா 10-19 அதி).

இந்த யோசுவா தன் வாழ்வில் இறுதி நாட்களில், இஸ்ரவேலின் கோத்திரங்களையெல்லாம் சீகேமிலே கூடி வரப் பண்ணி இஸ்ரவேலின் மூப்பரையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும், அதிபதிகளையும் வரவழைத்து பிரிவுபச்சசார உரை நிகழ்த்தினான். தேவன் ஆபிரகாமை அழைத்த காலம் முதற்கொண்டு கர்த்தரின் கிரியைகளையும்,கர்த்தர் செய்த நன்மைகளையும் எடுத்துச் சொல்லி, **ஆகையால், நீங்கள் கர்த்தருக்குப் பயந்து அவரை உண்மையும் உத்தமுமாய் சேவித்து உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும், எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றி விட்டு கர்த்தரைச் சேவியுங்கள்** (24:14).என்று அறைகூவல் விடுத்தான்.

*அத்தோடு நிறுத்தாமல், கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ, நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ, நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்று சூளுரைத்தான் (24:15).*

இங்கே யோசுவா கர்த்தரையே சேவிப்போம் என்ற தனது தீர்மானத்தை குடும்பத்தின் சார்பாக வெளிப்படுத்தும் போது, கர்த்தரைச் சேவிக்கிற காரியத்தில் உள்ள சவால்களையும் எடுத்துக் காட்டினான். ஆம், கர்த்தரைச் சேவிக்காமல், மற்றவைகளைச் சேவிக்க வாய்ப்புண்டு என்று சுட்டிக்காட்டுகிறான். அதே கர்த்தருக்கும், கர்த்தருடைய காரியங்களுக்கும் போட்டியாக ஏதாவது ஒன்று எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும். **நதிக்கு அப்புறத்தில் இருந்த தேவர்கள், எமோரியர்களின் தேவர்கள் என்று.** போட்டியானவைகளைக் கொண்டு வந்து வரிசைப்படுத்தி காரியங்களைத் திசை திருப்புவதில் சாத்தான் கில்லாடி. காலம் காலமாக இதில் அவன் கைதேர்ந்தவன்.

அருமையானவர்களே, கர்த்தரைச் சேவிப்பது என்பதன் பொருள் என்ன? உலகத்திலுண்டானவைகளைச் சேவிக்காமல் இருப்பதே கர்த்தரைச் சேவிப்பது. அப்படியானால், உலகத்திலுண்டானவைகள் எது? இதற்கான பதிலை அன்பின் சீடனாகிய யோவான் அப்போஸ்தலன் எப்படிக் கொடுக்கிறார் என்று கவனியுங்கள். ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள் (I யோவான் 2:16) ஆம், ஒருவன் செய்யும் எந்தப் பாவமாக இருந்தாலும் இந்த மூன்று வகைகளில் அடங்கிவிடும். ஆக, மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை ஜீவனத்தின் பெருமை ஆகியவைகளினாலே நாம் எவ்வகையிலும் தீண்டப்படுவதற்கு, எந்தச் சூழலிலும் அனுமதி கொடுக்காமல், தானியேலைப் போல தீர்க்கமான தீர்மானம் எடுத்து, யோசுவாவை போல் பிதாவாகிய தேவனை மாத்திரம் இயேசு கிறிஸ்துவின் மூலமாகச் சேவிக்கிறவர்களாக வேண்டும்.

எதிர் வரும் புதிய ஆண்டில் கர்த்தரை நாம் உண்மையாகச் சேவிக்கத் தீர்மானிப்பது உண்மையானால், கர்த்தரின் சித்தத்துக்கு நாம் நம்மைச் சமூலமாக ஒப்புக் கொடுக்க வேண்டும். இயேசு ஆண்டவர் பிதாவின் சித்தம் செய்வதும், அவருடைய கிரியையை முடிப்பதும் என்னுடைய போஜனம் என்றார் (யோவான் 4:34). பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படியாய் வந்த இயேசு செய்த காரியங்களில் ஒன்று தேவ திட்டத்திபடியாக அவருடைய சபையைக் கட்டியது ( மத்.16:18, அப்.2:38). அந்த சபையைச் சம்பாதிப்பதற்காகத்தான் இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தினார் (அப்.20:28). ஆக, புதிய ஆண்டில், பாரம்பரியத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டிராமல் இயேசு கட்டின சபையை அடையாளம் கண்டு, அதற்குள்ளாக வரும் உபதேசத்தை ஏற்றுக் கீழ்படிந்து, கர்த்தரைச் சேவிக்கிறவர்களாக மாறத் தீர்மானிப்போம்.

### 111 கெட்ட குமாரனின் தீர்மானம்

எதிர்வரும் புதிய ஆண்டுகளுக்கான தீர்மானம் சம்பந்தமாக நாம் மூன்றாவதாகப் பார்க்க இருப்பது, மனந்திருந்திய மைந்தனின் தீர்மானம் பற்றியது.

இப்பூலோக ஊழிய நாட்களில் இயேசுவால் மொழியப்பட்ட உவமைகளில் மூன்று உவமைகள் லூக்கா 15-ல் இடம் பெற்றுள்ளது. மூன்றுமே காணாமல் போனவை பற்றியது. முதல் உவமையில், 100-ல் 1 காணாமல் போகிறது. இரண்டாவதில் 10-ல் 1 காணாமல் போகிறது. மூன்றாவதில் 2-ல் 1 காணாமற் போகிறது. முதல் இரண்டு உவமைகளில் காணப்படும் ஆட்டுக்கும்,

வெள்ளிக்காசுக்கும் ஆத்துமா இல்லை. அவைகளுக்குரியவர்கள் தேடிக் கண்டுபிடித்து மகிழ்ச்சியடைந்தார்கள். மூன்றாவது உவமையில் காணப்பட்ட இளைய குமாரனுக்கு ஆத்துமா உண்டு. அவன் காணாமற்போனபோது (15:32). தகப்பன் அவனைத் தேட வில்லை. நாம் இதை கவனிக்க வேண்டும். ஏனெனில், அவன் நன்மை தீமை அறியும் அறிவை அடைந்த பிறகு, தன் தவறான முடிவால் காணாமற் போனான். அவனுடைய ஆத்துமாவிற்கு அவன்தான் பொறுப்பு.

தகப்பனிடமிருந்து பிரிந்துபோன இளைய குமாரன், தூரதேசத் துக்குப் போய் துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான். ஆஸ்தியை மாத்திரம் இவன் அழிக்காமல், தகப்பனிடமிருந்து பிரிந்த அந்த நிமிடத்திலிருந்து தன் ஆத்து மாவையும் அழித்துப்போட்டான். தானியேல் போலும், யோசுவா போ லும் பிதாவாகிய தகப்பனுக்குப் பிரியமானதைச் செய்யத் தீர்மானிக் காமல், தனக்குப் பிரியமானதைச் செய்யத் தீர்மானித்தான். கெட்ட குமாரன் என்று இவன் பட்டம் சூட்டப்பட்டதற்குக் காரணம் இந்த இடம்தான்.

எப்படியோ எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாய் நின்று கேவலப்பட்ட போது, ஆத்ம பரிசோதனை செய்கிறான். அப்பொழுது **புத்தி தெளிகிறது. அப்பொழுது எழுந்து என் தகப்பன் வீட்டுக்குப் போவேன்** என்று தீர்மானம் எடுக்கிறான் (15:18).

என்தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு விரோதமாக வும் பாவம் செய்தேன்'' என்று அறிக்கையிட்டு அவருடைய இரக் கத்திற்குக் காத்து நிற்பேன் என்று தீர்மானம் செய்தான். இவனு டைய வாழ்வின் திருப்புமுனை இவன் இப்படியாக எடுத்த தீர்மானம்தான். இன்றளவும் இவன் பேசப்பட்டு வருவதற்குக் காரணம் இவன் தகப்பனிடமிருந்து பிரிந்துபோக எடுத்த தீர்மானம் அல்ல. மாறாக, தகப்பனோடு ஒப்புரவாகும்படி எடுத்த தீர்மானம் தான். தேவனுக்கு விரோதமான பாவத்தால் தீண்டப்பட்ட ஒவ்வொரு மனிதனும் தங்கள் வாழ்வின் ஏதாவது ஒரு கட்டத்தில் எடுக்க வேண்டிய தீர்மானம் இது.

அருமையானவர்களே, புதிய ஆண்டு ஆசீர்வாதமாக, சமாதான மாக இருக்க வேண்டுமென்று வாஞ்சிப்பவர்களே, கெட்டுப்போன நல்ல குமாரனைப் போன்று தீர்மானம் எடுக்க நாம் தயாராக இருக்கி றோமா? சொல்லுங்கள்! கெட்ட குமாரனை மோசமானவன் என்று சித்தரிக்கிற நாம் நம் வாழ்வில் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம் என்பதை எண்ணிப் பார்ப்போம்! உண்மையாகவே ஆத்தும

பரிசோதனை செய்வோமானால்,கெட்டகுமாரனுக்கு நாம் எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்ல என்பதும், எப்படிப்பட்ட தீர்மானம் எடுக்க வேண்டுமென்பதும் புரியும். ஏனென்றால், ஆத்தும பரிசோதனை, நம் புத்தியைத் தெளிவாக்கும். கெட்ட குமாரன் தன் புத்தி தெளிய அனுமதித்தபடியால் தான் நல்ல குமாரனாக மாற முடிந்தது. [லூக்.15:17].

நம்முடைய பாவங்கள்தான் நமக்கும், பிதாவாகிய தேவனுக்கும் நடுவே பிரிவினையை உண்டாக்கியிருக்கிறது. [ஏசா. 59:17]. பாவங்களினிமித்தம் தகப்பனுக்குத் தூரமாகி விட்ட நம்மை கிறிஸ்துவின் சிலுவை தகப்பனோடு ஒப்புரவாகச் செய்கிறது [எபே.2:1பே-]. கெட்ட குமாரன் பட்ட பாடுகள், சந்தித்த அவமானங்கள் அவன் புத்தி தெளிவடைய உதவி செய்தது. ஆகவே, இந்த வருடத்தில் நாம் தேவனையும், கிறிஸ்துவையும், அவருடைய ஒன்றான மெய்சபையையும், அவருடைய உபதேசங்களையும் விட்டுத் தூரமாய்ப் போனதால் ஏற்பட்ட நிலையை எண்ணிப் பார்ப்போம் இக்காலத்தில் நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் சரீர வாழ்வின் பிரச்சினைகளுக்கும், ஆன்ம வாழ்வின் பிரச்சனைகளுக்கும் கிறிஸ்துவையும், அவருடைய உபதேசத்தையும் விட்டுப் பிரிந்ததுதான் காரணம் என்பதைத் தயக்க மில்லாமல் ஒத்துக்கொள்வோம். ஆவிக்குரிய புத்தியில் தெளிவடைவோம்.

புத்தி தெளிவதோடு நின்றுவிடாமல், கெட்டுப்போய் நல்ல குமாரனாய் மாறிய இளைய குமாரன் போல் எழுந்து, திரும்பித் தகப்பனண்டை போகத் தீர்மானிப்போம். ஆம், தேவனிடம், அவருடைய குமாரனிடம், அவருடைய ஒரே சபையினிடம், அவருடைய மெய் உபதேசத்தினிடம் திரும்பி வரத் தீர்மானித்துப் புதிய ஆண்டை நன்மையான ஒன்றாக, ஆசீர்வாதமான ஒன்றாக, சமாதானமான ஒன்றாக மாற்றிக் கொள்வோம். தகப்பன் காத்து கொண்டுதான் இருப்பார். நம்மைத் தேடி வரமாட்டார். ஏனெனில், நமக்குத் தேவையான நன்மை தீமை, சத்தியம்- அசத்தியம் போன்றவற்றைத் தந்துவிட்டார். ஆகவே, நாம் தான் அவரிடம் செல்லத் தீர்மானிக்க வேண்டும்.

ஆகவே, தானியேல் போல் தீர்மானிப்போம்! யோசுவா போல் தீர்மானிப்போம்!! கெட்டுப் போன நல்ல குமாரன் போல் தீர்மானிப்போம்!!!

**அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

# ஒருவருடைய ஜெபத்தின் மூலம் இன்னொருவர் இரட்சிக்கப்பட முடியுமா?

Bro. J.C. **சோட்**

**சி**ல நாட்களுக்கு முன்பு நான் ஒரு பெண்ணிடம் வேத பாடத்தைக் குறித்து விவாதித்துக் கொண்டிருந்தேன். அப்போது திடீரென அப்பெண், தான் மற்றொரு பெண்ணிற்காக ஜெபித்ததாகவும், அதன் விளைவாக, அந்நேரத்திலேயே அவர் யாருக்காக ஜெபித்தாரோ அப்பெண் இரட்சிக்கப்பட்டதாகவும் சொன்னார். அப்பெண் அந்த சம்பவத்தை என்னிடம் சொல்லும் போது, ஒருவருடைய ஜெபத்தின் மூலமாக இன்னொருவர் இரட்சிக்கப்பட முடியும் என்று சொன்னார். இதைக்குறித்து நான் அப்பெண்ணிடம் சில கேள்விகள் கேட்டேன். அதிலும் குறிப்பாக, புதிய ஏற்பாட்டில் ஒருவருடைய இரட்சிப்பிற்காக மற்றொருவர் ஜெபித்ததற்கான உதாரணம் உண்டா? என்று கேட்டேன். அப்பொழுது அப்பெண்ணின் துரிதான பதில், இது சம்பந்தமாக, எல்லா சபைகளிலும் இவ்விதமாகத்தான் போதிக்கப்படுகிறது என்பதாயிருந்தது.

அதன் பிறகு நான் அப்பெண்ணிடம் **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்;** விசுவாசி யாதவனோ ஆக்கினைகுள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16:16) என்று இயேசு கிறிஸ்து சொன்னவைகளை எடுத்துரைத்தேன். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே அப்பெண் இயேசு சொன்னவைகளைக் குறித்து எனக்குக் கவலையில்லை என்று சத்தமிட்டாள். பின்பு அவள் இப்படிப் பேசியமைக்காக வெட்கப் பட்டு, தான் கோபம் அடைந்ததாகச் சொல்லி, மன்னிப்புக்கோர முயற்சித்தாள். ஒருவேளை, அவள் மனதார மன்னிப்புக் கேட்டிருக்கலாம். ஆனால், இச்சம்பவம் இத்தகைய உபதே சத்தைப் போதிக்கிறவர்களுடைய நிலையை அருமையாகவும், சுருக்கமாகவும் காண்பிக்கிறது. அதாவது, இயேசு கிறிஸ்து சொன்னவைகளைக் குறித்து இவர்களுக்கு கவலை இல்லை. அப்படி இவர்கள் கவலைப்பட்டிருந்தால், ஒருவருடைய ஜெபத் தின் மூலமாக இன்னொருவர் இரட்சிக்கப்பட முடியுமென்று வேதாகமம் போதிக்காத காரியங்களைப் போதித்திருக்க மாட்டார்கள்.

ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், அவர் செய்ய வேண்டியதெல்லாம், அவர் எந்த இடத்தில் இருந்தாலும், எந்நிலையில் இருந்தாலும், தன் சிரம் தாழ்த்தி கர்த்தரிடம் தன் பாவங்களை மன்னியும் என்று மன்றாடினால் மன்னிக்கப்படும் என்று போதிக்கிறார்கள். இது மாதிரியான உபதேசம் உலககெங்கும் பிரபலமாகி வருகிறது. இது மேலோட்டமாகப் பார்த்தால் நன்றாகத்தான் இருக்கிறது. ஆயிரக்கணக்கானோர் இது தான் உண்மையென்றும் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். இதில் இங்கே கவனிக்க வேண்டியது. நம் கர்த்தர் இந்த உபதேசத்தைப் போதிக்கவில்லை என்பதாயிருக்கிறது. இவ்விதமாக யாரும் இரட்சிக்க பட்டதாக புதிய ஏற்பாட்டில் எந்தவிதமான உதாரணமும் இல்லை. சொல்லப்போனால் ஒருவருடைய ஜெபத்தின் மூலமாக இன்னொருவர் இரட்சிக்கப்பட முடியும் என்று புதிய ஏற்பாட்டில் நாம் எங்குமே காண முடியாது.

இரண்டவாதாக, ஜெபம் ஒருபோதும் சபைக்கு வெளியேயிருக்கும் ஒரு பாவிக்கு கட்டளையாகக் கொடுக்கப் படுவதில்லை. மாறாக, ஜெபம் என்பது ஒரு கிறிஸ்துவனுக்கு அதாவது தேவனுடைய பிள்ளைக்குக் கிடைக்கும் சிலாக்கிய மாகும். ஒருவர் பாவியாக இருக்கும்போது, அவர் தேவனுடைய பிள்ளையாக இல்லாமல் அவர் பிசாசின் பிள்ளையாக இருக்கிறார். நம் கர்த்தர், ஒருவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு தேவனுடைய குடும்பத்தில் அங்கத் தினராக வேண்டுமென்றால், அந்நபர் தேவன் குறிப்பிட்டுச் சொல்லும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறார். அப்படி ஒருவர் கிறிஸ்தவராக, சபையில் அங்கத்தினராக மாறிய பிறகு நிலைமை அப்படியே மாறுகிறது. எப்படியெனில், இப்போது தான் இந்நபர் தேவனோடு உடன்படிக்கை உறவில் இணைகிறார். ஆனாலும், அவர் எப்போது விரும்பினாலும் தேவனை நோக்கி ஜெபிக்கும் உன்னத நிலைக்கு உயர்த்தப்படுகிறார். அது மாத்திர மல்ல, தேவனுடைய பிள்ளையாக மாறின இந்நபர் பாவம் செய்தால் அவர் தேவனிடத்தில் மறுபடியும் திரும்புவதற்கு ஜெபம் முக்கியப் பங்கு வகிக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் தான் இந்நபர் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும், தன் தவறுகளை அறிக்கையிடவும் தன் பாவங்கள் மன்னிக்கப்பட தேவனிடத்தில் ஜெபிக்கும் படியாகவும் கட்டளையிடப்பட்டிருக் கிறார். அப்போஸ்தலர் 8 – ம் அதிகாரத்தில் மாயவித்தைக் காரனாகிய சீமோனுடைய சம்பவத்தைச் சிந்தித்துப் பாருங்கள்.

அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து; நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத் தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாய் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக் கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன்: நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றான் [அப்.8:18-24]. நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது [யாக்கோபு 5:16]. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்[ I யோவான் 1:9]

சபைக்கு அந்நியமாக இருக்கும் ஒரு பாவி இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், அவன் சில கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவேண்டுமென்று நம் கர்த்தர் கட்டளையிடுகிறார். நீங்கள், அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற மனமாற்ற சம்பவங்களை கவனித்துப் பார்த்தால், ஒருவரும் ஒருபோதும் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட ஜெபியுங்கள் என்று கேட்கவில்லை. மாறாக, மரணம், அடக்கம், உயித்தெழுதல்போன்றவை எடுத்துரைக்கப் பட்டு அதன்பின்பு தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்படியாகவும், பாவங்களிலிருந்து மனந்திரும்பும் படியாகவும், இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடும்படியாகவும், பின்பு இரட்சிக்கப்பட தண்ணீர் ஞானஸ் நானம் பெறும்படியாகவும் அவர்களுக்குப் போதிக்கப்பட்டது. ✝

பெண்கள் பகுதி

# வாசித்தல், தியானித்தல், படித்தல், இவைகளில் கவனம் செலுத்துவது

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே, இந்த வருடத்தின் இறுதியில் நின்றிருக்கும் நாம் முதலாவது தேவனுக்கு நன்றி செலுத்தி, பின்பு தேவன் தம் வார்த்தைகளைக் கொண்டு நமக்குக் கூறும் ஆலோசனைகளைக் கவனிப்போம்.

அப்போஸ்தலனாகிய பவுல் வாசித்தல், தியானித்தல், படித்தல், இவைகளைப் பற்றி உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு விபரமாக எழுதுகிறார். தீமோத்தேயுவுக்கு இவைகள் அவசியம் என்று ஆவியானவர் விரும்பியிருக்கிறார். இன்று இவைகள் நமக்கும் மிகத்தேவையாயிருக்கிறது.

நான் வருமளவு **வாசிக்கிறதிலும்**, புத்தி சொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு [1தீமோ:4:13]. **நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு, இவைகளிலே நிலைத்திரு** [தீமோ:4,15].

நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு [11தீமோ: 2:15].

சத்தியம் நம்மை விடுதலையாக்கும் என்பது அனைவரும் அறிந்த உண்மை [யோ: 8:32]. நாம் எந்த அளவு சத்தியத்தை அறிந்திருக்கிறோமோ அந்தளவு தான் விடுதலையாக முடியும். எனவே தான் வாசித்தல், தியானித்தல், படித்தல் அவசியம்.

தேவன் தம் வார்த்தைகள் வாசிக்கப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். எழுதிக் கொடுக்கப்பட்ட வேதாகமம் நம் கையில் இருப்பதால் தேவனுடைய எதிர்பார்ப்பில் எவ்வளவு உண்மை இருக்கிறதென்று பாருங்கள்.

[ஏசாயா 34:16–ல் கர்த்தருடைய புத்தகத்திலே தேடி வாசியுங்கள் என்று ஏசாயா உற்சாகப்படுத்துகிறார். மோசே நியாயப்பிரமாணங்களை மக்களுக்காக வாசித்தான்[யாத் 24:3–8] ஒவ்வொரு விடுதலையின் வருஷத்திலும் சகல புருஷர்கள் ஸ்திரீகள், குழந்தைகள், அந்நியர் முன்பாக இந்த பிரமாணங்கள் **வாசிக்கப்பட** வேண்டும்.[உபா:31:10–12]. யோசியா

இராஜாவின் காலத்தில் நியாயப்பிரமாணப் புத்தகம் கண்டெடுக்கப் பட்டு அது மீண்டும் வாசிக்கப்பட்டு மக்கள் நன்மை பெற்றார்கள் [II இராஜா:22,23]. எஸ்றாவின் நாட்களிலும் பிரமாணம், தெளிவாகவும், நீண்ட நேரமாகவும், சபையாருக்கு முன் **வாசிக் கப்பட்டது.** ஜனங்கள் நின்று, கவனித்து, தேவனை தொழுது அழுதார்கள். [நெகே:8:1-9;3]. பிரமாணங்களை வாசிப்பதின் அவ சியத்தை நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து தமது ஊழியத்தின் நாட்களில் வலியுறுத்துகிறார்.[மத்:12:3;19:4;21:16; 22:31:] [மாற்கு 2:25;12:10,26] [லூக்:6:3] பவுலும் விட்டு வைக்கவில்லை. இரட்சிப்பின் திட்டத்தில் **வாசிப்பது பற்றி** கூறுகிறார். [எபே:3:3,4,5] தெசலோனியருக்கு பவுல் எழுதும் போதும் நிரு பத்தை **வாசிப்பது** பற்றி எழுதுகிறார். [I தெச:5:27] [கொலோ:4:16]. எத்தியோப்பிய மந்திரி தேவனுடைய வார்த்தையை வாசித்துக் கொண்டு பயணித்தான் [அப் 8:30] வாசிக்கிறவனும் கைக்கொள்ளுகிறவனும் பாக்கியவான் என்று [வெளி: 1:13] - ல் வாசிக்கிறோம். நாம் நேசிக்கும் ஒருவர் நாம் எழுதும் கடிதத்தை உடனே வாசிக்க வேண்டும். என்று எதிர்பார்ப்பதுபோல தேவனும் அவரால் எமுதிக் கொடுக்கப்பட்ட வேதாகமத்தை நாம் **வாசிக்க வேண்டும்** என்று எதிர்பார்ப்பதில் என்ன தவறு இருக்கிறது.

ஏதோ தேவை நேரங்களில் வியாதி, கஷ்டம் என்று வரும்போது வாசிப்பதும் மற்ற நேரங்களில் தொடாமல் இருப்பதும் தவறு. நாம் பிரயாணம் செய்யும்போதும், மகிழ்ச்சியாயிருக்கும் போ தும், துக்கமாயிருக்கும்போதும், சோதனையான நேரங்களிலும், நாம் வேலை செய்யுமிடங்களிலும் வேதத்தை வாசிக்கவேண்டும். வேத வசனம் நம்மைப் பரிசுத்தப்படுத்தி, வழிநடத்தி, தெளிவு படுத்தி, நம்மை இரட்சிக்க வல்லமையுள்ளதாகையால் வேதம் **வாசிக்க** வேண்டும். நம் கையில் உள்ளது தேவனுடைய வார்த்தை என்பதால் வேதாகமத்துக்குரிய மரியாதை கொடுத்து, பத்திரப்படுத்தி பாதுகாக்க வேண்டும்.

அடுத்தது, **தியானித்தல்** வாசிப்பதை விட முக்கியமானது தியானித்தல் வாசிப்பதன்மூலம் ஒன்றைப்பற்றிய அறிவு கிடைக்கி றது. ஆனால் அதை நமது உடைமையாக்கிக் கொள்ள தியானம் அவசியம். தியானிக்கும் ஒருவர் வேதம் எனக்கு புரியவில்லை வேதத்தினால் எந்த பயனும் இல்லை என்று சொல்லவே முடியாது. பாக்கியவானைப்பற்றி முதலாம் சங்கீதத்தில் கூறும்போது, அவன் கர்த்தருடைய வேதத்தில் இரவும் பகலும் **தியானமாய்** இருக்கிற மனுஷன் என்கிறது. மேலும், உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் **தியானம்** [சங் 119:97] என்கிறார். மேலும், உம்முடைய சாட்சிகள் என்

**தியானமாயிருக்கிறபடியால்,** எனக்குப் போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன்: [119 : 99] என்று கூறுகிறார். உமது வசனத்தைத் **தியானிக்கும்படி** குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக் கொள்ளும். [119 :148]. தாவீதோடு சேர்ந்து நாமும் இவ்வாறு ஜெபிப்போம், **என் கன்மலையும் என் மீட்டாருமாகிய கர்த்தாவே** என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் **தியானமும்** உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக. [சங்:19:14].

**படித்தல்**

ஒருவன் உண்மையாலுமே பரலோகம் செல்ல விரும்பினால், அந்த பரலோகத்திற்கு தன்னை அழைத்துச் செல்லக் கூடிய வழி எது என்று கண்டுபிடிக்க நேரம் செலவழித்து, முயற்சி பண்ணி **படிக்க** வேண்டும். வேதத்தைப் **படிக்கும்போது** அதன் ஆசிரியர் யார், யாருக்கு எழுதபட்டது, ஆசிரியர் யாரைப்பற்றி பேசுகிறார், வாசிப்பதின் கருத்து என்ன, எந்தக் கால கட்டத்தில் எழுதப்பட்டது, என்ன நோக்கத்தோடு எழுதப்பட்டது என பல கேள்விகளை நமக்குள்ளே நாமே கேட்டு படிக்க வேண்டும். வேதத்தை படிக்கும் போது காலம் முக்கியம். முற்பிதாக்களின் காலத்திலா, மோசேயின் காலத்திலா, கிறிஸ்துவின் காலத்திலா எப்பொழுது எழுதப்பட்டது என தெரிந்து படிக்க வேண்டும்.

வேதத்தைப் படிக்கும்போது புரிந்து படிக்க வேண்டும். வேதாகமத்தினுடைய கருப்பொருளோ தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாக இயேசுவின் மூலமாக மனிதன் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது. வரப்போகும் இயேசுவைப் பற்றி பழைய ஏற்பாடும், வந்து விட்ட இயேசுவைப் பற்றி புதிய ஏற்பாடும் பேசுகிறது. **பயபக்தியோடு படிக்க** வேண்டும். தேவனுடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து படிக்க வேண்டும் [எ.பே.3:3,4]. நடக்கிறவனுடைய நடைகள் நம்மாலே ஆகிறதல்ல [எரே:10:23]

வசனம் நம்மை நியாயந்தீர்க்கப் போகிறபடியால் [யோவா 12:48] அதை மனதில் வைத்துப் படிக்க வேண்டும். படிப்பதில் முக்கிய நோக்கம் பிறருடன் பகிர்ந்து கொள்வதற்கே. வாசிப்பதும், தியானிப்பதும் நாம் மட்டும் செய்வது. படிப்பது என்பது பிறருடன் சேர்ந்து பகிர்ந்து கொள்வதோடு, நிற்காமல், உண்மையான சத்தியத்தைப் பேசுகிறதாகவும் இருக்க வேண்டும்.

நாம் வேதத்தை திறந்து வைக்கும்போது பரலோகத்தின் கதவு நமக்கு அடைப்படாது

எனவே, வருடத்தின் இறுதியில் நிற்கும் நாம் நம்மைப் பார்த்து கேள்விகளை கேட்டு என் நிலை எவ்வாறு இருக்கிற தென்று தெரிந்து, தவறு இருப்பின் திருத்தம் செய்து கொள்ள முயற்சிப்போம். தேவன் உதவி செய்வாராக! ஆமென்!! ✝

# சாக்கு போக்கு சொல்ல இடமில்லை.

Dr. ஏபில் நாயகம்

கிறிஸ்துவின் மரணத்தைவிட அவரது பிறப்பே முக்கியம் என்று நம்பிக்கை கொண்டிருக்கும் உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வாரத்திற்கு ஒரு நாள் நாங்கள் கிறிஸ்தவர்கள் என்ற சிலரின் நிலையையே மோசமென்று நினைத்து வேதனைப்படுக்கையில், வருடத்திற்கு ஒருமுறை நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று தங்களை காட்டிக் கொள்பவர் களைப் பார்த்தால் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. கிறிஸ்துவின் மரணத்தினால் கிடைக்கும் இரட்சிப்பின் நிறைவான சந்தோஷத்தை பெற்றுக் கொள்ளாமல், அவரின் பிறப்பை மட்டுமே நாடி குறைவான சந்தோஷத்தைத் தானே இன்று பலர் தேடுகிறார்கள்!

இப்படிப்பட்டவர்களுக்கு மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டி ருக்கிறோம். அப்படியானால் நாம் செய்ய வேண்டுவதென்ன? உண்மையையும், மேன்மையையும் அறிந்த நம்மிடம் தேவன் எதிர்பார்ப்பது என்ன? கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியை தேவ தூதன் மூலம் கேட்ட மந்தை மேய்ப்பர்கள், அதை பிரசித்தம் பண்ணினார்கள் என்று நாம் வாசிக்கிறோம். அப்படியானால்,அவ ருடைய மரணத்தின் விசேஷத்தையும் உயிர்த்தெழுதலின் மேன்மையையும் அறிந்த நாம் அதை பிரசித்தம் பண்ண வேண்டாமா? கட்டளையிடப்படாத கிறிஸ்துவின் பிறந்த தினத்தை கொண்டாடுபவர்கள், கட்டளையிடப்பட்ட முக்கியமான பல காரியங்களை கண்டுகொள்ளாமல் இருக் கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். இந்த நிலை மாற நாம் ஒவ்வொருவரும் உதவ வேண்டுவது அவசியம்.

வாலிபர்களாகிய நம்மிடமும் அந்த பொறுப்பு கொடுக்கப் பட்டுள்ளது. தவறான எண்ணமும் புரிதலும் உள்ளவர்களிடம் உண்மை சத்தியத்தை நாம் சொல்ல வேண்டும். ஆனால் இன்று நம்மில் பலர் சாக்குப்போக்குச் சொல்லி அந்த பொறுப்பை தட்டிக் கழிக்கின்றோம்.

தேவன் எரிகிற முட்செடியின் வழியாய் மோசேயை சந்தித்த போது, எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருக்கும் இஸ்ரவேல் ஜனங்களை மீட்கும் பணியை மோசேக்கு கொடுத்தார். ஆனால் மோசேயோ தான் அந்த வேலைக்கு ஏற்றவன் இல்லை என்பதை சாக்குப் போக்கினாலே தேவனிடம் சொல்வதை நாம் அறிந்திருக் கிறோம். தேவனுக்கும் மோசேக்கும் நடந்த இந்த உரையாட லிருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

எப்படியாக மோசேக்கு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் ஜனங்களை மீட்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டதோ அதைப்போல நமக்கும் பாவத்தின் அடிமைத்தனத்திலிருப்பவர் களையும், அறியாமையில் இருக்கிறவர்களையும் மீட்கும் பணி கொடுக்கப்பட்டுள்ளது.

மோசே தேவனிடம் சொன்ன முதல் சாக்குபோக்கு **நான் எம் மாத்திரம்?** என்பது. (யாத்.3:11). இதை மோசே சொல்லும்பொழுது அவன் மேய்ப்பனாக இருந்தான் எண்பது வயதை கடந்து விட்டார். அவர் எகிப்திலிருந்து வெளியே வந்து 40 ஆண்டுகள் கடந்து விட் டது. எனவே, இந்த வேலைக்கு நான் சரியான நபரா? என்ற கேள் வியும் சந்தேகமும் மோசேக்கு ஏற்ப்பட்டிருக்கும். ஆனால், தேவ னின் பதில் என்னவாயிருந்தது? யாத் 3:12ல் **நான் உன்னோடு இருப்பேன்? இந்த பதில் மட்டுமேபோதுமானதாயிருந்திருக் கும்.** ஏனென்றால், **தேவன் நம் பட்சத்தில் இருந்தால் நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்** என்று ரோமர் 8:31ல் வாசிக்கி றோம். மோசேயைப் போல இன்னும் நம்மில் பலர் இந்த சாக்குப்பே பாக்கைத்தான் சொல்கிறோம். ஜனங்களின் அறியாமையைப் போக்க என்னால் முடியுமா என்று மலைத்து நிற்கிறோம். இயேசு வின் சீடர்களைப் பாருங்கள், படிப்பறிவில்லாத பேதுரு தைரியமா கவும் அதிகாரத்தோடேயும் பேச முடிந்தது. மத் 28:20 ல் இயேசு கிறிஸ்துவின் மூலம் அதே வாக்குத்தத்தம் நமக்குக் கொடுக்கப்பட் டிருக்கிறது.

இரண்டாவதாக, யாத் 3:13 ல் **அவைகளுக்கு நான் என்ன சொல்லுவேன்?** என்ற சாக்குப்போக்கை மோசே சொல்கிறான் எகிப்து தேசத்திற்கு மீண்டும் சென்று ஜனங்களை விடுதலை யாக்கும்படி வந்தேன் என்ற சொன்னால் பல கேள்விகள் கேட்கப் படும் என்பதை மோசே அறிந்திருந்தான். தேவன் அதற்கும் பதில்

வைத்திருந்தார். யாத் 3:14–22 வரை நாம் தேவனுடைய பதிலை வாசிக்க முடியும். ஒருவேளை என்னுடைய அறிவு குறைவு என்றும், பாவத்தின் பிடியிலும் அறியாமையிலும் இருக்கும் ஜனங்களிடம் என்ன சொல்ல வேண்டும் என்றும் தெரியாம லிருப்பதை நாம் சாக்காகக் காட்டுகிறோமா? தேவன் நமக்குப் பதிலை ஆயத்தமாக வைத்திருக்கிறார். 1கொரி 15.1–4 ஐ வாசிக்கும்பொழுது சுவிசேஷம் என்றால் என்ன? என்பதை பவுலின் மூலம் நமக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். எனவே, என்ன சொல்ல வேண்டும் என்று அனைக்கு தெரியாது என்ற சாக்கு போக்கை நாம் சொல்ல இயலாது.

இப்படியாக, மேலும் மூன்று சப்பைக்காரணங்களை மோசே தேவனிடம் சொன்னார். தனக்கு செவிகொடுக்க மாட்டார்கள் என் றும், **தான் திக்குவாயும் மறந்தநாவும் உள்ளவன்** என்றும் வேறு ஒரு நபரை அனுப்பும் என்றும், சாக்கு போக்கு காட்டினார். ஆனால், மோசேயின் எல்லா சாக்குபோக்கிற்கும் தேவன் பதில் கொடுத்தார். யாத். 4:14 ல் தேவன் மோசேயின் மீது கோபமானார் என்று வாசிக்கிறோம். உடனே மோசே தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டு இஸ்ரவேல் ஜனங்களை மீட்கும்படி தேவனு டைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்தார்.

பிரியமானவர்களே! ஏற்கனவே சொல்லப்பட்டது போல பாவத்தின் பிடியிலிருக்கும் ஜனங்களிடம் நாம் அனுப்பப் பட்டிருக்கிறோம். அறியாமையில் இருப்பவர்களுக்கு மெய்யான சத்தியத்தை சொல்லும் கடமையும், பொறுப்பும் நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்த பொறுப்பை நிறைவேற்றுவதே நம் பங்கில் சரியான ஒரு செயல். மாறாக, அதை செய்யாமலிருக்க சாக்குப்போக்குகளை நாம் தேடினால் தேவன் நம்மீதும் கோபம் கொள்வார். அதுமட்டு மல்ல தொடர்ந்து கிறிஸ்துவின் பிறப்பையும், மரணத்தையும் சரி யாக புரிந்து கொள்ள முடியாமல் பல ஆத்துமாக்கள் அழிந்து போவ தற்கு நாம் காரணமாகிவிடுவோம். எனவே, சாக்குப்போக்கு சொல்ல நமக்கு இடமில்லை. மாறாக, நம் பொறுப்பை சரிவர நிறைவேற்றுபவர்களாக வாழ நம்மை ஒப்புக்கொடுப்போம். ✝

**வாலிபர்களாகிய உங்களுக்கு எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

சிறுவர் பகுதி

# நீங்களும் ஒளியாயிருக்கிறீர்கள்

Dr. பிரெய்ஸி

**ஹா**ய் குட்டீஸ்! எப்படி இருக்கீங்க? இந்த வருடத்தில் அக்கா எழுதின கட்டுரைகளைப் படித்துப் பயனடைந்து அதை உங்கள் நடைமுறை வாழ்வில் கடைபிடிக்கிறீர்கள் என நம்புகிறேன். இம்மாதம் வருடத்தின் கடைசி மாதம். எதிர் வரும் புதிய ஆண்டிற்கும், சொல்லப் போனால் இனிவரும் ஆண்டு களுக்கும் பயனுள்ள ஒன்றை நான் உங்களுக்குச் சொல்லப் போகிறேன். சரியா?

இயேசு ஆண்டவர் இப்பூமியில் வாழ்ந்த போது அநேக காரியங் களை உபதேசங்களாகப் போதித்து, நல் ஆலோசனைகள் கூறி, தேவ வார்த்தைகளை எடுத்துச் சொல்லி பலவித அற்புதங்களை நடப்பித்தார். அவைகளில் ஒன்று மத்தேயு 5:14– 16 வசனங்களில் உள்ளது. அதில், எப்படி விளக்குத் தண்டின் மேல் வைக்கப்பட்ட விளக்கு வெளிச்சம் கொடுக்கிறதோ, அதுபோல நாமும் வெளிச்சம் கொடுக்க வேண்டும்.

அன்பு குழந்தைகளே! மரக்கலால் மூடி வைக்கப்பட்ட விளக்கு போல் இருட்டில் வாழ்பவர்களாக இல்லாமல், விளக்குத் தண் டின் மேல் வைக்கப்பட்ட விளக்கு போல், நாம் வாழும் இடங்களில் நற்கிரியைகள் மூலம் மற்றவர்களுக்கு முன்பாகப் பிரகாசித்து, அதன் மூலம் பரலோகத்திலுள்ள தேவனை மகிமைப்படுத்த வேண்டும். சரியானதை, நியாயமானதை மாத்திரம் செய்கிற காரி யத்தில் நாம் முன் மாதிரிகளாக இருக்க வேண்டும்

ஆகையால் குழந்தைகளாகிய நீங்களும் பிரகாசித்து வெளிச்சம் கொடுக்க வேண்டுமென்பதை மறந்து விடாதீர்கள். எதிர் வரும் புதிய ஆண்டு 2020–லும், அதைத் தாண்டி வரும் ஆண்டுகளிலும் அப்படியாயிருக்கத் தீர்மனியுங்கள். இருப்பீர்களா?

அதிக அன்புடன்
ப்ரைசி அக்கா! ✝

## சிறுவர்களுக்கான வேத வினா ( படிக்க அப் . 5:1-11)

1. இயேசு யாரிடத்தில் பேசிக் கொண்டிருந்தார்?
2. இப்பகுதியில் ஒளியாயிருப்பது யார்?
3. நம்முடைய விளக்கு எங்கே வைக்கப் பட வேண்டும்?
4. நம்முடைய ஒளி பிரகாசிப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?
5. இவைகளைப் பேசின போது இயேசு எங்கே இருந்தார்?
6. புதிய ஆண்டுக்கான உங்கள் தீர்மானம் என்ன?

### சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | |
|---|---|
| B. பெனிட்டா டென்னி சாரோன் | - காங்கயம் |
| ஜெனபர் ரெபேக்காள் | - வேலூர் |
| S. சாம்பிரபுதாஸ் | - தோளூர்பட்டி திருச்சி |
| சகாய புஷ்பராஜ் | - திருச்சி |
| ஜோஷ்வா ரோசன் | - காங்கயம் |
| கிங்ஸ்லி ரூபஸ் | - காங்கயம் |
| S.ஜென்சி | - நீலகிரி |
| S. ஜோயல் கிருபைநாதன் | - ஈரோடு |
| R. அபிஷேக் | - பவானி |
| R. ரோஷிணி | - பவானி |
| M. ஸ்வேதா | - பவானி |
| M. ஹரிஷ் | - பவானி |

வார்த்தை - காலம் - ஆதி
வார்த்தை - தேவன்
வார்த்தை - சிருஷ்டிப்பின் அதிகாரம்
வார்த்தை - ஜீவன்
வார்த்தை - ஒளி
வார்த்தை - மாம்சம்
வார்த்தை - கிருபை
வார்த்தை - சத்தியம்
வார்த்தை - பிதாவின் மகிமை.

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு...

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன், அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை ஜனவரி மாத இதழில்)**

## II இராஜாக்களின் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள் (10-20 அதிகாரங்கள்)

1) அகசியவின் தாயார் பெயர் என்ன?
2) தேசத்தின் ஜனங்கள் எந்தக்கோவிலை இடித்தார்கள்?
3) யோவாஸ் ராஜாவாகிய போது எத்தனை வயதாயிருந்தான்
4) யோவாஸின் மரணத்திற்குப் பிறகு சிங்காசனத்தில் வீற்றிருந்தது யார்?
5) யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவின் குமாரன் பெயர் என்ன ?
6) யோதாம் எங்கே அடக்கம் பண்ணப்பட்டான்?
7) ஒசெயா சமாரியாவிலே எத்தனை வருடங்கள் ராஜ்யபாரம் பண்ணினான்? ?
8) எசேக்கியா ராஜா யார் செய்தபடியெல்லாம் செய்தான்?
9) எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்தில் எப்படி பிரவேசித்தான்?
10) ரப்சாக்கே என்பவன் யார்?

## நவம்பர் மாத வினாக்களுக்கான விடைகள்

1. **இரும்புக்கோடரி** (6:6)
2. **அக்கினி மயமான குதிரைகள் இரதங்கள்** (6:7)
3. **நாலு குஷ்டரோகிகள்** (7:9)
4. **சமாரியாவின் ஒலிமுகவாசலில் வியாபாரம் நடந்தது** (7:18)
5. **ஏழு வருஷம்** (8:1)
6. **ஆசகேல்** (8:11)
7. **யேசபேலின் வேசித்தனங்களும், பில்லி சூனியங்களும்** (9:22)
8. **பித்கார்** ( 9:25)
9. **யோசபேல்** (9:30)
10. **பாகாலின் கோவில்** (10:27)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| ஜெனிபர் சுரேஷ் | - | கேத்தி, பாலடா |
| T. கலையரசன் மோகன்தாஸ் | - | தோளூர்பட்டி, திருச்சி |
| M. செல்வம் | - | வடவள்ளி |
| K.S. மாணிக்கவாசகம் | - | திருச்சி |
| T. சமாதான ராஜ் | - | கோவில்பட்டி |
| V.S.S. பால்ராஜ் | - | மதுரை |
| தே. தனம் பேன்ஸி | - | கள்ளக்குறிச்சி |
| J. ரெபேக்காள் ஜேசுராஜ் | - | மணப்பாறை |
| S. சாம் பிரபுதாஸ் | - | திருச்சி |
| S. ஜெயராஜ் | - | ராமநாதபுரம், கோவை |
| Mrs. J. ஜான்சி | - | ஆனைமலை |
| C.தர்மராஜ் | - | கன்னியாகுமரி |
| Mrs. V.C. ரூபவல்யா | - | தூத்துக்குடி |
| A. மீனா ஆறுமுகம் | - | சென்னை |
| M.D. ரவிச்சந்திரன் | - | சென்னை |
| கிளாடிஸ் ரமேஷ் | - | வேலூர் |
| C. அருள்ராஜ் | - | சென்னை |
| P. ஜெயக்குமார் மாலதி | - | மூலனூர் |
| N. ஜெபத்தாய் | - | தூத்துக்குடி |
| Mrs. ஜெயமணி ஜெயபாஸ்டியன் | - | கடலூர் |
| S. ஜமுனா | - | திருப்பூர் |
| சங்கீதா | - | சென்னை |
| செல்வமணி குணசேகரன் | - | காங்கயம் |
| ராமச்சந்திரன் | - | காங்கயம் |
| இளவரசி | - | காங்கயம் |
| சாலமோன் | - | காங்கயம் |
| ராமசாமி | - | காங்கயம் |
| உமாதேவி | - | காங்கயம் |
| பாலாமணி | - | காங்கயம் |

# படைப்பிலிருந்து பாடம்

Bro. K. M. **பிலிப்**

**தே**வ நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! தேவனுடைய படைப்பில் மனிதன் மட்டுமே பிறந்தது முதல் மரிக்கும் வரை பாடம் கற்றுக் கொண்டேயிருக்கிறான். ஒவ்வொரு நாளும் தனக்கு ஏற்படும் அனுபவங்கள், பிறருடைய அனுபவங்கள், நடைபெறும் நிகழ்ச்சிகள், கற்கும் கல்வி, செய்யும் வேலை என்று வாழ் நாள் முழுவதும் பாடம் கற்கும் வாய்ப்பை பெற்றுள்ளான். மேலும், தேவனுடைய படைப்புகள் ஒவ்வொன்றும் பாடம் கற்றுக் கொடுக்கின்றன. வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்கு பகல் வார்த்தைகளை பொழிகிறது. இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. [சங்19:1-2]. சிங்கம், குதிரை, வெள்ளாட்டு கடா போன்ற பெரிய மிருகங்களும்; எறும்பு, வெட்டுக்கிளி, குழிமுசல், சிலந்திப்பூச்சி போன்ற சிறுபிராணிகளைக் கொண்டும் பாடம் கற்க முடியும் [நீ 30:2428]. மேலும், சோம்பேறியே! நீ எறும்பினிடத்தில் போய் அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தை கற்றுக் கொள் என்று ஞானியும் [நீதி.6 :6], ஆகாயத்துப் பட்சிகளையும், காட்டுப்புஷ்பங்களையும் கவனித்துப் பாருங்கள் என்று இயேசுவும் [மத் 6:26-28] கூட சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மிகப்பெரிய சூரியன் காலந் தவறாமை என்ற மிகப் பெரிய பாடத்தையும், மழை நல்லோர், தீயோர் என்று பாராமல் எல்லோருக்கும் பொழிவதில், மனிதர்களும் உறவு, நண்பர்கள் என்றில்லாமல் பகைவர், அந்நியர் என்று எல்லோர் பேரிலும் அன்பு மழை பொழிய வேண்டும் என்ற உன்னதமான பாடத்தையும் கற்றுக் கொடுக்கின்றன. இவ்வளவு வாய்ப்புகள் கிடைத்தும் பாடம் கற்றுக் கொள்ளாத மனிதர்களைப் பற்றி என்ன சொல்வது?

தேவ படைப்பை உற்றுக் கவனித்தால் மற்ற எல்லா படைப்புகளுமே தான் படைக்கப்பட்ட நோக்கத்தை அன்று முதல் இன்று வரை மிகச் சரியாய் நிறைவேற்றி வருகின்றன. மனிதர்களையும் தேவன் மிகச்சிறந்த நோக்கத்திற்காகவே படைத்தார். இவர்கள் என் மகிமைக்கொன்று சிருஷ்டிக்கப்பட்ட என் ஜனம். இவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள் [ஏசா 43:7,21]. சிருஷ்டிக்கப்பட்ட என் ஜனம் கர்த்தரைக் துதிக்க வேண்டும்[ சங்102:8]

என்றும், நற்கிரியைகளை செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் என்றும் (எபே 2:10) நாம் படைக்கப்பட்ட நோக்கத்தை வேதம் தெளிவுபடுத்துகிறது. மற்ற படைப்புகள் வார்த்தையால் படைக்கப்பட்டன. ஆனால் மனிதனை தன் கைகளால் தொட்டு தடவி தன் சாயலாகப் படைத்தாரே அந்த உன்னத தேவனின் நோக்கத்தை நாம் எந்த அளவு சரியாய் நிறைவேற்றி வருகிறோம்?

அன்பானவர்களே, இங்கு தேவனுடைய படைப்பின் நிகழ்ச்சியிலிருந்து 3- பாடங்களை விரிவாய் கற்றுக் கொள்வோம்.

**பாடம்1** பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்தது (ஆதி 1:2). ஆதியில் தேவன் வானத்தையும், பூமியையும் படைத்த போது அவைகள் ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்தது. இப்படி ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்த பூமி, ஆறே நாட்களில், தேவனுடைய பார்வை படி அது மிகவும் நன்றாயிருந்தது (ஆதி 1:31) என்று சொல்லும் அளவுக்கு பூமி ஒழுங்குள்ளதாயும், நிறைவுள்ளதாயும் காட்சி அளித்தது. இது எப்படி சாத்தியமாயிற்று? சர்வவல்லமையுள்ள தேவன் ஒவ்வொரு நாளும் பூமியின் மீது தன் வார்த்தையை அனுப்பினார். அந்த ஜீவனும், வல்லமையுமுள்ள வார்த்தைகள் பூமியிலிருந்த ஒழுங்கின்மையையும், வெறுமையையும் எடுத்துப் போட்டு பூமியை ஒழுங்குள்ளதும், நிறைவுள்ளதுமாய் மாற்றியமைத்தது அது தேவ பார்வையில் மிக நன்றாயிருந்தது. மனிதர்கள் வாழ்க்கையிலும் ஒழுங்கின்மையும், வெறுமையும் மாற்றி அமைக்க தேவ வார்த்தையால் மட்டுமே முடியும்.

மாற்கு 5:1-18 வசனப்பகுதியில் பிசாசுகள் பிடித்த ஒரு மனிதனை( லேகியோன்) இயேசு சந்தித்தார். அவனுடைய வாழ்க்கையை உற்று நோக்கினால், அவன் குடியிருப்போ கல்லறையில்; அவனை அடக்க ஒருவராலும் கூடாதிருந்தது; இரவும் பகலும் கூக்குரல் இட்டான்; தன்னைத் தானே காயப்படுத்திக்கொண்டான்; வஸ்திரமில்லாதவனாய்; புத்தியில் தெளிவில்லாதவனாய் காணப்பட்டான். இன்றும் கூட பிசாசின் பாவ குணங்களால் பிடிக்கப்பட்டவர்கள், மது, போதை, விபசாரம், திருட்டு போன்றவைகளில் ஈடுபட்டு தங்கள் மானம், மரியாதை, சுகம் எல்லாவற்றையும் இழந்து ஒழுங்கின்மையாய் கல்லறை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நமது வாலிப பிள்ளைகளும், படிக்கும் பிள்ளைகளும், தங்கள் வாழ்க்கையை தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு விடிவு தான்

என்ன மீண்டும் சரித்திரத்தைக் கவனிப்போம். இயேசு பிசாசு பிடித்தவனை நோக்கி அசுத்த ஆவியே இந்த மனுஷனை விட்டு புறப்பட்டுப் போ என்று தன் ஜீவனும், வல்லமையுமுள்ள வார்த்தையை அனுப்புகிறார். உடனே பிசாசுகள் அவனை விட்டு ஓடிப்போயிற்று. இப்பொழுது அநத மனிதனைப் பாருங்கள். கல்லறையிலே ஒழுங்கற்ற வாழ்க்கை வாழ்ந்த அம்மனிதன், வஸ்திரம் தரத்தவனாய், அடக்கமாய், அமைதியாய், மக்களுக்கு மத்தியில், இயேசுவின் பாதத்தருகே அமர்ந்திருக்கிறான். ஒழுங்கின்மை எடுத்துப் போடப்பட்டது.

அன்பானவர்களே இருதயத்தை பரிசுத்தமாக்கி, வாழ்க்கையில் ஒழுங்கின்மையை எடுத்துப் போடும் சத்திய வார்த்தைகளுக்கு இடம் கொடுப்போம். கர்த்தருடைய உத்தமமும், செய்கை சத்தியமாயிருக்கிறது. அவரது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள் [சங் 33:4,119:172]. இங்கு அநீதிக்கு இடமில்லை. அதாவது கட்டளைகளால் உணர்வடைந்து எல்லா பொய் வழிகளையும், வீண் சிந்தனைகளையும் வெறுத்து – அவருடைய வார்த்தையில் பிரியமாயிருந்தால் [சங் 119:104, 113] நம் வாழ்க்கை ஒழுங்குள்ளதும், மிகவும் நன்றாகவுமிருக்கும்.

லூக்கா 5:1–7 பகுதியில் – பேதுருவும் அவன் கூட்டாளிகளும் இரவு முழுவதும் வலைகளைப் போட்டு மீன்கள் ஒன்றும் அகப்படாமல் வெறுமையாய் கடற்கரையில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை இயேசு சந்தித்தார் உபதேசித்தார். அவர்களது வெறுமையை எடுத்துப் போடும் படியாய் மீன்பிடிக்க மீண்டும் வலையைப் போடுங்கள் என்றார். [அவருடைய வார்த்தையின் படி வலைகளைப் போடுங்கள்] என்றார். அவருடைய வார்த்தையின் படி வலைகளைப் போட்டு இரண்டு படகு நிறைய மீன்களைப் பிடித்தார்கள். வெறுமை நிறைவாய்மாறிற்று. உள்ளங்கள் மகிழ்ச்சியால் நிறைந்தது. ஆம் கர்த்தருடைய வேதம் குறைவற்றது. சங்.19:7]. அவருடைய கற்பனைகளை கவனித்தோமானால் நலமாயிருக்கும். அப்பொழுது சமாதானம் நதியைப் போலும் நம் நீதி சமுத்திரத்தினட அலைகளைப் போலும் நிறைவாயிருக்கும் [ஏசாயா48:18].கர்த்தரை மேய்ப்பராய் ஏற்று அவருடைய வார்த்தைக்கு செவி சாய்த்தால் நம் பாத்திரம் நிரம்பி வழியும்.

ஞானமுள்ள தேவன் எதைச் செய்தாலும் அது மிகமிகச் சரியாகவும், மனிதனுக்கு நன்மையாகவுமே இருக்கும். வெளிச்சமும்

இருளும் ஒன்றாயிருப்பது நல்லதல்ல என்று கண்ட தேவன் வெளிச்சத்தையும் இருளையும்வெவ்வேறாகப் பிரித்தார். தேவ பிள்ளைகளாகிய நாம் வெளிச்சத்தின் பிள்ளைகள் [II தெச 5:5]. நம்மில் இருளுக்கு இடமில்லை. இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தியிருக்கிறார்.

பாவ உலகிலிருந்து பிரித்தெடுக்கிறார். கோணலும் மாறுபாடு மான சந்ததியின் நடுவே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாய் இருக்க வேண்டும் [பிலி2:15]. உப்புக்கடலில் வாழும் மீன் கசப்பதில்லை. நாம் அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படா திருப்போம். கிறிஸ்துவுக்கும், பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்திற்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? இப்படி தானியேலும், 3 நண்பர்களும் அந்நிய பழக்கங்களுக்கு தங்களை விலக்கி தீர்மானத்தோடு வாழ்ந்தார்கள். தேவன் அடிமைகளாயி ருந்த அவர்களை அரண்மனை அதிகாரிகளாக உயர்த்தினார். நம் முடைய ஐக்கியம் இப்பூமியில் வேதத்தோடும், சபையோடும், பரி சுத்தவான்களோடும் இருக்கட்டும். அப்பொழுது இயேசுவின் வரு கையில், பரலோகத்தில் பிதாவோடும் குமாரனோடும், பரிசுத்த ஆவியானவரோடும் வாழும் பாக்கியத்தை பெறுவோம்.

பாடம் III: சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் ஆதி 1:28].

சர்வத்தையும் படைத்து ஆண்டு வழி நடத்தி வருகிற தேவன் மனிதர்களை [ஆதாம் +ஏவாள்] படைத்து அவர்களுக்கு சகல ஜீவ ஜந்துக்களையும் ஆளும் அதிகாரத்தைக் கொடுத்து கனப்படுத்தினார். ஏதேனில் அவைகளும் அவர்களுக்கு கட்டுப் பட்டன. ஆனால், ஏவாள், எப்பொழுது சர்ப்பம் [பிசாசு] தன்னை ஆளுபடியாய் அதன் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டாளோ அதை ஆதாமும் நிதானித்துப் பார்க்காமல் அதற்கு ஆதரவு அளித்தானோ அப்பொழுதே தேவன் கொடுத்த ஆளுமை அதிகாரத்தை இழந்து போனார்கள். இப்பொழுது மனிதன் எல்லா ஜீவ சந்துக்களுக்கும் பயந்து அடங்கி வாழும் ஈனப்பிறவியாய் மாறிபோனான். ஆனா லும் அன்புள்ள தேவன் எகிப்தில் அடிமைகளாயிருந்த தன் ஜனமா கிய இஸ்ரவேலை விடுவித்து சுதந்திரமாக வாழும் வாய்ப்பைக் கொடுத்தார். அவர்கள் தேவ ஆளுகைக்குத் தங்களை ஒப்புக் கொ டுத்தார்கள். தேவன் மீண்டும் ஆளுகை அதிகாரம் கொடுத்தார்.

கொடுத்தார். அவர்கள் தேவ ஆளுகைக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். தேவன் மீண்டும் ஆளுகை அதிகாரம் கொடுத்தார். அவர்கள் சிவந்த சமுத்திரத்தின் மீது அதிகாரம் செலுத்தினர், அது இரண்டாகப் பிளந்து நின்றது. மாராவின் கசப்பான நீர் மதுரமாயிற்று. கற்பாறையிலிருந்து தண்ணீர் வந்தது எதிரி அமலேக்கியர் முறியடிக்கப்பட்டார்கள். ஆனால் நன்றி கெட்ட அந்த ஜனம், தேவனை விட்டு விக்கிரகங்களுக்கும் அஞ்ஞான பழக்க வழக்கங்களுக்கும் தங்களை அடிமைப்படுத்தியதால் வீழ்ந்து அநேகர் அழிந்து போனார்கள். இன்றும் கூட தேவ மக்கள் தேவ ஆலோசனைக்கு ஒப்புக்கொடுத்து தேவ ஆளுகையை இழந்து நிற்கிறார்கள். ஆதித்திருச்சபையில் வாலிபர்கள், தேவ வசனத்தில் நிலைத்திருந்து பொல்லாங்கனை ஜெயித்து பலவான்களாய் திகழ்ந்தார்கள். [I யோ 2:14]. இன்றும் அது சாத்தியமே. ஆனால், இன்றைய வாலிபர்களோ, போதைப்பொருளாலும், மதுவாலும், சீரழிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்கள், உலகத்தில் இருக்கிறவனிலும், தங்களில் இருக்கிறவர் பெரியவர் என்ற உணர்வுக்கு உட்பட்டு [ I யோ 4:4], உண்மையான தேவ ஆளுகைக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தால், பொல்லாங்களை எதிர்க்கும் பலவான்களாய் திகழ்வார்கள்.

அன்பானவர்களே நம்மைக் குறித்து தெளிவாய் புரிந்து கொள்வோம். நாம் ராஜரீகக் கூட்டம் [II பே2:9], தேவனுக்கு முன் நாம் இராஜாக்கள் [ வெ.2:7] நாம் அடிமைகளல்ல ஆளுகை செய்ய வேண்டியவர்கள். [நாம்] தேவனுடைய பிள்ளைகள். தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் [Iயோ 3:2 ;5:4]. ஆம் நாம் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருந்து எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்வோம். [வெ2:7]. நாம் படைக்கப்பட்ட நோக்கத்தைப் நிறைவேற்றுவோம். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் வாழ்ந்து அநேகரை தேவ ஆளுகைக்குட்படுத்தி ராஜ்ஜியத்தின் மக்களாய் மாற்றுவோம். ஆமென். ✝

---

**தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் போது....**

**சமாதானமும்**

**நீடித்த நாட்களும், தீர்க்காயுசும் பெருகும்**

**ஐசுவர்யம், மகிமை ஜீவன் அடைவோம். நீதி:3:2 ; நீதி: 22:4**

# கிறிஸ்து என்னும் மார்க்கம்
## தேவ சாயல் ரூபம்

Bro J. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை

அன்பானவர்களே!

சென்ற மாதம் தேவத்துவத்தைப் பற்றிப் பார்த்தோம். இந்த மாதத்தில், தேவன் நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியாயும் மனுஷனை உண்டாக்குவேமாக, என்றார், ஆதி.1:26,7, இதைப்பற்றி கவனிக்கவும்.

தேவன் ஆவியாயிருக்கிறார், யோவா. 4:24. ஆகையால், ஆவியாயிருக்கிற தேவனுக்கு நம்மைப் போன்ற பூமிக்குரிய அல்லது மாம்சத்திற்குரிய சரீரமில்லை யோபு 10:4. ஆனால்,

தேவனால் பார்க்க முடியும், சங் 11:4 ; நீதி 15:3
அவரால் பேச முடியும், மத். 3:17 ;17 ;5 ;
யோவா. 12:28. 2பேது.1:17,18.
அவரால் ஒரு நிகழ்ச்சியை ஞாபகம் வைத்துக் கொள்ள முடியும் (Remember) 1சாமு. 15:2
அவருக்கு ஆத்துமா உண்டு. மத். 12:18 ஏசா.42:1.

அவருக்கு இருதயமும், மனதும் உண்டு (ஆதி. 6:6,7; 1சாமு. 13:14 ; 15:2 )

ஆக, தேவன் ஆவியாயிருக்கிறார், அவருக்கு ஆத்துமா, இருதயம், மனம் இருக்கிறது. ஆவி என்பது இருக்கிறது. ஆவி என்பது ஆள் தத்துவத்தை குறிக்கக் கூடியதாயிருக்கிறது, சில இடங்களில் ஆத்துமாவும் ஆள்தத்துவமாக சொல்லப்பட்டுள்ளது. ஆவியாயிருக்கிற ( ஆள்தத்துவமான) தேவனுக்கு ஆத்துமா, இருதயம், மனது உள்ளது. இது தான் ரூபமாயிருக்கிறது.

எப்படியெனில், ரோமர் 12:2 –ல் உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள், என்று பரிசுத்த ஆவியானவர் பதிவு செய்துள்ள படியினாலே மனம் என்பது ரூபமாயிருக்கிறது. அதோடு இருதயமும் ஆத்துமாவும் அதற்கு ஒப்பிடமாயிருக்கிறது. இதில் ஆத்துமா என்பது உள்ளான மனிதனின் உயிரைப் போல இருக்கிறது. இதிலே இருதயம் எண்ணங்கள், சிந்தனைகள், நிகழ்ச்சிகள் நாம் பார்த்தவைகள், கேட்டவைகள் அனைத்தையும் பதிவு செய்து வைக்கும். பொக்கிஷ சாலையைப் போன்றது. அது போல மனம் என்பது முடிவுகள் செய்யக் கூடியதாயிருக்கிறது.

மாற். 7:18–23– ல் இயேசுவானவர் அநேக மாம்ச சிந்தனைகள் இருதயத்தில் இருப்பதாக கூறுகிறார். ஆகையால் இந்த ஆவிக்குரிய

இருதயத்தில் பதிந்துள்ள தேவனுக்கு விரேதமான எல்லாவற்றையும் ஆவிக்குரிய விருத்தச்சேதனத்தின் போது (தேவையில்லாத பாகத்தை வெட்டி நீக்கி விடுவது) எடுத்துப் போட்டு ரோமர் 2:28,29; கொலே.2:11,12. ஆவிக்குரிய கனிகளைப் பெற்று (கலா.5:22,23) வாழ வழிவகை செய்கிறார். இது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும் போது ஞானஸ் நானத்தில் நடக்கிறது.

இருதயத்தின் சிந்தனைகள் எண்ணங்கள் மாற வேண்டியது (கெட்டவை சுத்திகரிக்கப்பட்டு நல்லவை நாட்டப்பட வேண்டும்) என்பதற்கு இயேசுவானவர் மத். 12:43-45 - ல் ஒரு மனிதன் இரட்சிக்கப் பட்டால் மட்டும் போதாது இருதயம் என்னும் வீட்டிலே ஆவிக்குரிய கனிகளைக் கொண்டு நிரப்ப வேண்டும். அப்படி தொடர்ந்த விசுவாசம், தேவன் மேல் அன்பு, தொடர்ந்த கீழ்ப்படிதல், கிறிஸ்துவைப் போல வாழ்தல் இல்லாவிட்டால், ஏற்கனவே கீழ்ப்படிந்த போது தேவனால் விருத்தச்சேதனம் செய்யப்பட்டு எடுத்துப் போடப்பட்ட மாம்சத்தின் கிரி யைகள் எல்லாம் மீண்டும் வந்து தங்கும். அப்பொழுது அந்த மனிதனு டைய முன் நிலைமையிலும் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாயி ருக்கும் என்று இயேசுவானவர் எச்சரிக்கிறார்.

ஏனென்றால், சாலமோனும் கூட நீதிமொழிகளிலே (நீதி 23:7) ஒரு மனிதனுடைய இருதயத்தின் நினைவுகள் எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான் என்கிறார், எரே. 17:9.

ஆகையால், பிள்ளைகளை ஒரு நல்ல சூழ்நிலையில் வளர்க்க வேண்டும். சபையின் நிகழ்ச்சிகளிலே பிள்ளைகளை தவிர்க்கக்கூடாது. அவர்கள் சிறுவயது முதற்கொண்டு நல்ல காரியங்களையே பார்த்து கேட்டு பேசி அவைகளையே தங்கள் இருதயத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த உலகமும் உலகத்தின் மாம்சத்திற்குரியவைகள் பிள் ளைகளிடம் சேராதபடி அவர்கள் இருதயத்தில் தங்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது பெற்றோரின் பிரதான கடமையாயிருக்கிறது 2தீமோ.2:20-22.

மனம் என்பது முடிவுகள் செய்யக்கூடியது. நாம் இப்பொழுது அல்லது இன்றைக்கு எவைகளைச் செய்ய வேண்டும் அல்லது செய்யக் கூடாது நாம் என்ன உடை உடுத்த வேண்டும் என்பவைகளையும் என்ன படிக்க வேண்டும். எப்படி தன் எதிர் காலத்தை திட்டமிட வேண்டும் என்பன போன்ற விருப்பங்களை அல்லது முடிவுகளை எடுப்பது மனம் ஆகும் அப்.பவுல் ரோமர் 7:13-8:2வரை வாசித்தால் அவர து மனம் நல்லதை செய்யவேண்டுமென்றே விரும்புகிறது. ஆனால், அவருக்குள் (இருதயத்திற்குள்) இருக்கின்ற பாவம் அந்த நன்மையை செய்ய விடாமல் தடைசெய்யக் கூடியதாக இருக்கிறது. அநேக நேரங்க ளில் உலகத்தாருக்கு இருதயத்தின் சிந்தனைகளே மனதின் நல்ல முடி வையும் மேற்கொண்டு கெட்ட வழியில் செல்ல நடத்துகிறது, ரோம.7:17.

ஆனால், அப்.பவுல் அதை வென்றுவிட்டகாதக் கூறுகிறார். ரோம.8:2–ல் கிறிஸ்துவினுடைய ஆவியின் பிரமாணம் (புதிய உடன் படிக்கை) அவருடைய இருதயத்திலே எழுதப்பட்டிருந்தால் (எரே.31:31 33; எபி. 8:8–10) பாவம் மரணம் (அவருடைய இருதயத்தில் இருந்த கிறிஸ்துவுக்கு விரோதமான காரியங்கள் என்பவைகளின் பிரமாணத்தி னின்று விடுதண செய்தது என்கிறார். செய்தது இனிமேல் மனம் எடுக் கிற முடிவுக்கு இருதயம் தடையாயிருக்காது. ஏனென்றால், அது தேவ னால் சுத்திகரிக்கப்பட்டுவிட்டது சங்.51:10;73;1;2 தீமோ. 2:22;1பேது.1:22.

ஆகையால், இளைய சந்ததியினரை தேவனுடைய வசனங்களில் பழக்குவிக்க வேண்டியது பெற்றோரின் கடமையா யிருக்கிறது ஆதி.18:19; உபா.6:6–0; நீதி. 22:15 (தமிழில் நெஞ்சில் என்று மொழி பெயர்க்கப்பட்டது. ஆனால் ஆங்கிலத்தில் இருதயம் என எழுதப்பட்டது) 2தீமோ.1:4,5. பிள்ளைகளை தேவனுடைய வசனங்களில் நடத்த வேண்டுமானால் அவர்கள் இருதயத்தில் தேவனுடைய வார்த்தைகள் இருக்க வேண்டுமானால், பெற்றோர் தங்கள் நேரம் மற்றும் பிரயாசங்களைப் பிள்ளைகளுக்காக செலவு செய்ய வேண்டும். தேவனுக்கு விரோதமான உலக காரியங்களை தவிர்க்கும் படி தியாகம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுடைய எதிர் கால நித்திய ஜீவனுக்கான வாழ்க்கை கேள்விக்குறியாக இருக்கும்.

**தேவ சாயலிலே** நாம் படைக்கப்பட்டிருக்கிறோம். சாயல் என்றால் : அப்.பவுல் எபேசியருக்கு எழுதும் போது மெய்யான நீதியிலும், பரி சுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள் என்றார். ஆகையால் நீதி, பரி சுத்தம் ஆகியவை தேவனுடைய சாயலாக சொல்லப்பட்டுள்ளது. இந்த சாயலை மனிதனுக்கு தேவன் சிருஷ்டிப்பின் போது கொடுக்கிறார். மனிதன் பாவம் செய்யும் போது இந்த தேவ சாயலை இழந்து போகிறான். கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவம் கழுவப்படும் போது மீண்டும் இந்த சாயலை மனிதர் பெறுகிறார்கள். அதோடு தேவன், இரட்சிக்கப்படுகிற வர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் மகிமையையும் ஜீவனையும் கொடுக்கிறார், 2தெச:2:14; ரோமர் 6:3–8. இது கிறிஸ்துவின் புதிய ஏற் பாட்டிற்கு (சுவிசேஷத்திற்கு) கீழ்ப்படிவதினால் மட்டும் தேவன் கொடுக்கிறார். இந்த நன்மை கள்ளப் போதகத்தினால் வருவதில்லை.

ஆக, ஆத்துமா, இருதயம், மனசு ஆகியவை ரூபமாகவும், நீதி, பரியந்தம், சாயலாகவும் வேதாகமம் நமக்கு விளக்குகிறது.

இதையே தேவன் மனிதனுக்கு சிருஷ்டிப்பின் போது அருளினார். இதுதான் மனிதனை தேவன் எந்த அளவிற்கு நேசிக்கிறார் என்பதற்கும் அடையாளமாயிருக்கிறது.

தேவன் ஆவியாயிருக்கிறது போல மனிதனையும் உள்ளான மனித னிலே ஆவியாகப் படைத்தார். மனிதன் உடலைவிட்டு சென்றுவிட்டு

சென்றுவிட்டாலும். ஆள் தத்துவமானவனாக இருப்பான், சகரி.12:1, மனிஷனுடைய ஆவியை அவனுக்குள் உண்டாக்கினார். தேவன் நாசி யிலே ஜீவசுவாசத்தை ஊதினபோது மனிதன் ஜீவ ஆத்துமாவை பெற்றான், ஆதி.2:7 அதோடு இருதயம் மனசு என்னும் ரூபத்தை நீதி பரி சுத்தம் ஆகிய சாயலையும் பெறுகிறான்.

மனிதன் தேவ சாயல் ரூபத்தில் இருப்பதால் தான் அவன் அல்லது அவன் இந்த உலகத்தைவிட்டுபூமிக்குரிய மரணத்தின் போது சொல்லும் போது தேவனிடத்திற்கு சொல்லுவதாக பிரசங்கி 12:7 கூறுகி றது. மேலும் பிரசங்கி 3:20,21– ல் மனிதன் மிருகம் எல்லா உடலும் மண் ணுக்கு திரும்பினாலும் மனுஷனுடைய ஆவி உயர ஏறுவதாகவும் ( ஏனென்றால் மனிதனுடைய ஆவி தேவ சாயல் மண்ணோடு கலந்து போவதாகவும் ( தாழ பூமியிலிறங்கும்) கூறப்பட்டுள்ளது.

மனிதனுக்கு தரப்பட்டுள்ள தேவ சாயல் ரக்ஷபம் கண்ணால் காண முடியாததாயிருககிறது. ஆகவே அவை நித்தியமானதாயிருக்கிறது. மேலும், இவை உள்ளான மனிதன் என்றும் வேதம் விளம்புகிறது 2கொரி.4:16,18.

சிலர் இப்படி சொல்லவும் போதிக்கவும் நாம் கேட்டிருப்போம். அத எப்படியென்றால் ஆண்கள் மட்டுமே தேவ சாயலில் ரூபத்தில் சிருஷ்டிக் கப்பட்டுள்ளதாகவும் பெண்கள் ( சகோதரிகள்) தேவ சாயல் ரூதத்தில் சிருஷ்டிக்கப்படவில்லையென்றும் போதிக்கிறார்கள் வாதிடுகிறார்கள். ஆனால் தேவனுடைய படைப்பில் உள்ளான மனிதனில் ஆண், பெண் இருபாலரும் தேவ சாயல் சபத்தில் தான் படைக்கப்பட்டிருக்கிறோம், ஆதி.1:27. தமிழில் சில இடங்களில் மனம் என்று மொழிபெயர்த் துள்ளனர். ஆனால் ஆங்கிலத்தில் மற்றும் மூல பாஷையிலும் இருதயம் சொல்லப்பட்டது உதாரணம் : உபா.32:46.

ஆக தேவனுடைய படைப்பிலே உள்ளான மனிதனிலே ஆண் பெண் வித்தியாசம் இல்லையென்பதை கவனித்தோம்.

தேவ இரட்சிப்பிலே ஆணுக்கொரு இரட்சிப்பு பெண்ணுக்கொரு இரட்சிப்பு இல்லை இருவருக்கும் இரட்சிப்பு சமம், கலா.3‘26–29.

அதே போல் பரலோகத்திலும் புதிய சரீரத்தில் ஆண் பெண் வித்தியாசம் இல்லை ஏனென்றால் உலக சரீரமோ வாழ்க்கையோ அங்கு இல்லை லூக். 20:27–40. ஆனால் உலகத்தில் நாம் யாராக வாழ்ந்தோம் என்பது நம்முடைய ஆவிக்குரிய இருதயத்தில் (உள்ளத்தில்) பதித்திருக்கும், லூக்.16:19–31. இந்த உலக வாழ்க்கையில் அவரவர் அதாவது ஆண் பெண் அவர்களுடைய கடமையை தேவ சித்தத்தின் படி செய்ய வேண்டும் பிதாவாகிய தேவனும் கிறிஸ்துவும் ஒரே நபர் என்கிற வாதம் சிலர் வைக்கிறதை நாம் கவனிக்கிறோம்.

வேதத்தில் சொல்லப்பட்ட இரண்டு ஆத்துமாக்களும் ( நபர்களும்) ஒருவரா அல்லது இரு வேறு நபர்களா என்பதை நாம் நிதானித்து அறிய வேண்டும். மத். 12:17,18(ஏசா.42:1) இங்கே என் ஆத்துமா என்று பேசுகிறவர் பிதாவாகிய தேவன் கிறிஸ்துவைப் பற்றி பேசுகிறார். இது பிதாவின் ஆத்துமா. அப்.2:31 – ல் பேதுரு பிரசங்கிக்கும் போது கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவது இல்லையென்றும் என்கிறார். என் ஆத்துமா ஆள்தத்துவம்) என்று பிதா சொல்லுகிறார். கிறிஸ்துவின் ஆத்துமா (ஆள்தத்துவம்) என்று பேதுரு கூறுகிறார். இவ்விருவரும் ஒரே நபரா (நாமகரண கூட்டத்தார் சொல்வது போல) அல்லது வெவ்வேறு ஆத்துமாவா (வெவ்வேறு நபர்களா) என்பதை நீங்களே நிதானித்து அறிந்து கொள்ளுங்கள் அவர்கள் இருவரும் வெவ்வேறு நபர்கள் ஒரே தெய்வீகமாக (தேவத்துவமாக) இருக்கிறார்கள். இது தான் சத்தியம் பரலோகத்தின் தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

✝

## நாளும் நடப்பும்

- நீட்தேர்வில் தமிழகத்திற்கு விலக்களிக்க முடியாது - மத்திய அரசு
- இந்தியா முழுவதும் வெங்காய விலை வரலாறு காணாத உயர்வு
- பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டால் தூக்கு தண்டனை - ஆந்திர அரசு
- மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட குடியுரிமை சட்ட திருத்த மசோதாவுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டம்
- தமிழகத்தில் வடகிழக்கு மழையின் காரணமாக அணைகள் ஏரிகள் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி
- வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான 20 ஓவர் கிரிக்கெட் தொடரை இந்தியா கைப்பற்றியது.

## பொருத்தனை மகள்!

P.M. SAMMA

**யெ**ப்தாவின் மகள் ஏன் வெளியே வந்தாள் என்று நமக்கு வேதத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் அதைக்காட்டிலும் அவளை குறித்தும், அவள் தகப்பனின் செயல் குறித்தும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய விஷயம் உள்ளது.

யுத்தத்திற்கு செல்வதற்கு முன், யெப்தாவின் பொருத்தனை அவர் யுத்தத்தில் வெற்றிகரமாக திரும்பினால் அவரது வீட்டிலிருந்து தனக்கு எதிர் கொண்டு வருவது கர்த்தருடையது என்றும், அதைத் தகனபலியாக செலுத்துவேன் என்றான் (நியா 11:30–31).

எந்தப் பொருத்தனையும் தேவனுடைய சட்டத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும் ( லேவி 20:1–5, எரே. 7:31–32).

அறியாமல்/ சரியாக யோசிக்காமல், தீர்க்கமாக சிந்திக்காமல் வாக்குறுதியளித்ததின் பலனை இப்போது யுத்தத்தில் வெற்றி கண்டு வீடு திரும்பும் போது யெப்தா பெற்றுக்கொள்ளுகிறான்!! ஆம்... தன்னுடைய மகளே இவருக்கு எதிர் கொண்டு வருகிறாள் ( நியா11:35).

### பொருத்தனைக்கான சிறப்பு விதிகள்

சமாதான பலி, போஜன பலி, தகன பலி ஆகியவை தேவனுக்கு பொருத்தனையாக செய்யப்படலாம்.

பொருத்தனை நிறைவேறியதும், பலி செலுத்த வேண்டியது ( உபகாமம் 23:21–23 ; பிரசங்கி 5:1–4).

தனக்குச் சொந்தமான எதையும் தேவனுக்கென்று பொருத்தனை செய்யலாம். பிள்ளைகள்/ ஜனங்கள் (லேவியராகமம் 27: 2–8), மிருகங்கள் (லேவியாராகமம் 27:9–13), வீடுகள் ( லேவியாராகமம் 27:14–15), அல்லது சொத்து ( லேவியராகமம் 27:16–25). பெரும்பாலான உறுதிமொழிப் பலிகளை மீட்டெடுக்கலாம் அல்லது திரும்ப வாங்கலாம். மேலும் லேவி 27 ல் பெரும்பாலானவை மீட்பின் விலையை எவ்வாறு தீர்மானிப்பது என்பது குறித்து விவாதிக்கின்றன.

தலைச்சன்/ முதற்பேறான பிள்ளைகள் ஏற்கனவே கடவுளுக்குச் சொந்தமானவர்கள் என்பதால் அவர்கள் மீது பொருத்தனை செய்தால் அவர்களை மீட்க முடியாது (யாத்திரகாமம் 13:2, 12–15). மேலும், ஒரு முறை பொத்தனை செய்து மீட்டெடுக்கப்பட்டவற்றை, இரண்டாவது முறையாக பொருத்தனை செய்தால் அதையும் மீட்டெடுக்க முடியாது.

பொருத்தனை செய்யப்படும் சொத்துக்களை, எந்த நோக்கத் திற்காகவோ மீட்கப்படுவதற்கு முன்பே அதை விற்றுவிட்டாலும் அந்தத் தொகை ஆசாரியர்களின் சொத்தாக மாறுகிறது [லேவியராகமம் 27–21].

அதன்படி அன்னாளி முதல் மகனாகிய சாமுவேல் கர்த்தருக்குச் ஊழியம் செய்ய வந்தார் [I சாமுவேல் 3:1].

தனக்கு ஒரு குழந்தை வழங்கப்பட்டால், அந்தக் குழந்தை கர்த்தருக்குக் கொடுக்கப்படும் என்று அவனுடைய தாய் பொருத் தனை செய்திருந்தாள் [ I சாமுவேல் 1:11].

லேவி 27ன்படி பொருத்தனை செய்த குழந்தைகளை மீட்க அனுமதித்தாலும், முதல் குழந்தை ஏற்கனவே கடவுளுக்கு சொந் தமானதாகையால் மீட்க முடியாது.

இப்படியானால் யெப்தாவின் மகளுக்கு நடந்தது என்ன? வெற்றிகரமான போரிலிருந்து யெப்தா திரும்பிய போது அவரது வீட்டிலிருந்து அவரை வாழ்த்திய முதல் நபர் அவரது ஒரே மகள்.

அவள் அவனுடைய முதல் மகள் என்பதால் அவனால் அவளை மீட்க முடியாது.

கர்த்தருக்கு மிகவும் பரிசுத்தமானவளாகவும் குறிக்கப்பட்டாள் [ லேவியராகமம் 27:28].

யெப்தா பொருத்தனையின் மூலம் தனது மகளை வாழ்நாள் முழுவதும் கன்னியாக இருக்க வேண்டும் என்பதை யெப்தா மற் றும் அவரது மகள் இருவரும் உணர்ந்தனர். யெப்தாவைப் பொறுத் தவரை, அவருடைய பரம்பரையின் முடிவைக் குறிக்கிறது. அவ ரது மகள் தனது தந்தையின் பொருத்தனையை கடைப்பிடிக்க ஊக்குவித்தார். அவள் கன்னித்தன்மையை குறித்து புலம்புவ தற்கு இரண்டு மாதங்கள் கேட்டாள் [நியா.11:38].

அவளுடைய வாழ்க்கை முடிவடையாததால் அவள் குறுகிய வாழ்க்கையைப் பற்றி அவள் வருத்தப்படவில்லை என்பதைக் நாம் கவனிக்க வேண்டும்.

யெப்தா தனது பொருத்தனையை நிறைவேற்றிய போது, அவள் ஒருபோதும் ஒரு ஆணுடன் உறவு கொள்ளவில்லை என் பது குறிப்பிடத்தக்கது [நியா:11:39].

தந்தையின் பொருத்தனையின் காரணமாக அவள் உயிரை இழந்ததாக எந்தக் குறிப்பும் இல்லை. அத்தகைய அனுமானத்தை செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. பலிபீடத்தின் மீது பலிக் கான விலங்குகளை மட்டுமே வைக்க முடியும். மற்ற அனைத்தும் மீட்கப்பட்டன அல்லது தேவனுக்கான சேவையில் வைக்கப் பட்டன. ✝